# தமிழ்ச்சோலை

## அரையாண்டிதழ்

### மாணாக்கர் வெளியீடு

மலர் : 14 மார்ச் 2024 அரும்பு : 25



**தமிழாய்வுத்துறை**

**காவேரி மகளிர் கல்லூரி (தன்னாட்சி)**

(தேசியத் தர நிர்ணயக் குழுவால் (மூன்றாம் சுற்று) 'A' தகுதி பெற்றது)

ISO 9001 : 2015 சான்றளிக்கப்பட்டது.

**திருச்சிராப்பள்ளி – 18.**

## ஆசிரியர் குழு


முனைவர் ச. இராமலட்சுமி

முனைவர் அ. யசோதா

முனைவர் மா. ஆசியாதாரா

திருமதி. பொ. அபிராமி

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | கவிதைகள் | 1 - 18 |
| 2. | பொன்மொழிகள் | 19 - 24 |
| 3. | பொதுஅறிவு | 25 - 28 |
| 4. | கட்டுரைகள் | 29 - 43 |
| 5. | விடுகதைகள் | 44 - 48 |
| 6. | தெரிந்துகொள்வோம் | 49 - 50 |
| 7. | சிறுகதை | 51 - 52 |
| 8. | ஓவியங்கள் | 53 - 58 |




# நல்வரவு

# அவள் சுயநலவாதி



ஆம்! அவள் ஒரு சுயநலவாதி
தன் பிள்ளைக்கே எல்லாப் புகழும்
கிடைக்க வேண்டும் என்று நினைப்பவள் ...
அவளைப்பற்றி யார் என்ன நினைப்பார்கள்
என்று அவளுக்குத் தெரியாது
அவளைப்பற்றி மட்டும் நான்
நினைத்துக் கொண்டிருக்கிறேன் என்பதும்
அவளுக்குத் தெரியாது ...
அவள்தான் என்னைப் பத்துமாதம்
ஈன்று எடுத்தவள் ....

**இரா. கவிசக்தி**
இளநிலை இரண்டாமாண்டு
ஊட்டச்சத்து மற்றும் உணவுமுறை
மேலாண்மையியல்

# சமூகத்தின் நிலை


அடுப்பு எரிக்கும் உனக்குக் கல்வி எதற்கு?
என்ற நிலை
பேனாவைத் தாங்க வேண்டிய கையில்
குடும்பச் சிக்கலைத் தாங்குகிறாள்
சிக்கலைத் தாங்குவதற்குப் பதிலாக
புத்தகத்தைத் தாங்கினால்
சமூகத்தின் நிலை மாறும்.



**இ. நிவேதா**
இளநிலை முதலாண்டு
உயிர்தொழில் நுட்பவியல்

# தமிழ்

அன்னை சொன்ன மொழி
ஆதியில் பிறந்த மொழி
இணையத்தில் இயங்கும் மொழி
ஈடிலாத் தொன்மை மொழி
உலகம் போற்றும் மொழி
ஊர்கூடி வியக்கும் மொழி
எல்லாரின் மனதிலும் இருக்கும் மொழி
ஏவுகணையிலும் ஏவும் மொழி
ஐயத்தைப் போக்கும் மொழி
ஒளி மலராகப் பிறந்த மொழி
ஓசையோடு நிறைந்த மொழி
ஔவை விளைத்த மொழி



கலைமகளின் துணைமகளே !!!
என் மக்களின் மனதில் துள்ளியவளே !!!
கருத்துக்களைக் கணிப்பவளே !!!
கண்ணின் இமைநொடியே !!!
காலம் அழிந்தாலும் அண்டம் அழிந்தாலும்
ஞானத்தின் ஒளியே!!!
புவியின் அழகியே !!!
அமைதியின் கடலே !!!
இயற்கையின் நீதியே !!!
இமயத்தின் இறுதியே !!!
வளத்தின் கலையே !!!
வண்ணத்தின் சிலையே !!!
வாலிபத்தின் வளமே !!!

## கவிதைகள்

வருடத்தின் ஒளியே !!!
வீட்டின் குலமகளே !!!
தமிழ்நாட்டின் திருமகளே !!!
அகிலம் போற்றத் திகழ வேண்டும் தாயே !!!
தமிழின் அடிகள் !!!
வெற்றியின் படிகள் !!!
வீரத்தின் பண்புகள் !!!
பரிணாமத்தின் பெருமகள் !!!
உன்னைக் கண்டு வியந்தவள் !!!

வா. அபிநயா
இளநிலை முதலாண்டு தமிழிலக்கியம்

## முள்

முள் போலச் சில சொல்
முள் வடு ஆறிவிடும்
சொல் வடு ஆறாது.




## பயன்

சிலர் தேவைக்குப் பொருட்களை விட
மனிதர்களை அதிகம்
பயன்படுத்துகிறார்கள்

## அம்மா

நிறைய பாசம், கொஞ்சம் கோபம்
கடல் போல அக்கறை
அதுதான் அம்மா !



வை. ஐஸ்வர்யா
இளநிலை முதலாண்டு
தகவல் தொழில்நுட்பவியல்

# தன்னம்பிக்கை

நீ விழும்போதெல்லாம் தாங்கிப் பிடிக்க கை ...
மனம் உடையும்போதெல்லாம் தட்டிக் கொடுக்கும் கை ...
தனியே நீ அழும்போதெல்லாம் உன்
கண்ணீரைத் துடைக்கும் கை ...
வெற்றியின் வழி கடினமானது
அதற்கு நம்முடன் துணையாக வரும் கை ...
மனிதனிடம் இருக்கும் வலக்கை, இடக்கையை விட
முக்கிய பங்கு வகிக்கும் கை
என்னால் முடியாது என்று நினைக்கும்போது,
உன்னால் முடியும் என்று ஊக்குவிக்கும் கை ...
அது வேறு யார் கையும் அல்ல ...
உன்னுள் உள்ள உனது தன்னம்பிக்கை ...
அதை மட்டும் ஒருபோதும் இழந்து விடாதே
வெற்றி உன் காலடியில் ...



ச. சக்திபிரியா
முதுநிலை இரண்டாமாண்டு தமிழிலக்கியம்

# அப்பா

தன் தலைக்கு மேலே
உட்கார வைத்து நம்மை
அழகு பார்க்கும் அப்பாவை
நாம் ஒருபோதும்
தலை குனிய வைத்துவிடக் கூடாது ...
கண்ணில் கோபத்தையும்
இதயத்தில் பாசத்தையும் வைத்திருக்கும்
ஒரே உறவு அப்பா



ம. ராஜ தர்ஷினி
இளநிலை முதலாண்டு
தகவல் தொழில்நுட்பவியல்

## கவிதைகள்

# விவசாயி

கடவுளை நேரில் பார்க்க முடியவில்லை என்றாலும்
நமக்காக விவசாயிகளைப் படைத்திருக்கிறார்
நமக்குப் பசிக்கும் நேரத்தில் நமக்காகச் சாப்பாடு கொடுப்பவர்கள்
விவசாயிகள்தான் ...
நம் அம்மா கொடுக்கும் சாப்பாடுகளைப் பிடிக்கவில்லை
என்றால் நாம் வேண்டாம் என்று சொல்லிவிடுகிறோம்
இந்த வார்த்தைகளைச் சொல்லும் முன்
விவசாயிகள் கஷ்டப்படுவதை நாம் நினைத்துக்கொண்டால்
நம் அம்மா கொடுக்கும்
சாப்பாட்டை வேண்டாம் என்று சொல்ல மாட்டோம்
அதனை அமிர்தமாகக் கொண்டு சாப்பிடுவோம் ...



**" விவசாயிகள் வாழ்க வளமுடன் "**
**"விவசாயிகள்தான் கடவுள் ....**
**இவர்கள் நமக்காகப் படைக்கப்பட்ட கடவுள் ..."**

இ. ஆனந்தி
இளநிலை இரண்டாமாண்டு தமிழிலக்கியம்

# வெற்றி



அலட்சியத்திற்கும் ஆறு எழுத்துக்கள்
விடாமுயற்சிக்கும் ஆறு எழுத்துக்கள் !!
விடாமுயற்சி என்ற ஆறு எழுத்தைப்
பின்பற்றினால் போதும்
வாழ்க்கை என்ற நான்கு எழுத்தில்
வெற்றி என்ற மூன்று எழுத்து
கனியைச் சுவைக்க முடியும்.

கதிஜாதுல் நூரியா
இளநிலை முதலாண்டு வணிகவியல்

## அப்பா... மகள்



சில நேரங்களில்
பகைவன் போலத் தெரிந்தாலும் ....
உனது பாசத்தை மிஞ்சிட
யாரும் இல்லை இவ்வுலகில்
என் அன்பு அப்பா ... !
உன்னை விட்டு வெகுதூரம் உள்ளேன்
ஆவலுடன் காத்திருக்கின்றேன்
உனது பாச மகள் ...

க.கு. யஷ்வந்தி தேவி
இளநிலை இரண்டாமாண்டு ஊட்டச்சத்து மற்றும்
உணவுமுறை மேலாண்மையியல்

## உழைப்பு

உழைக்காதவன் கையில் தங்கமும் அழுக்கு
உழைப்பவன் கையில் அழுக்கும் தங்கம்

## பள்ளி




அன்று பள்ளியைப் பார்த்து அழுதேன்
பள்ளிக்குச் செல்ல முடியாது என்று
இன்றும் பள்ளியைப் பார்த்து அழுகிறேன்
பள்ளிக்குச் செல்ல முடியுமா என்று !!

மோ. ஜீவா
இளநிலை முதலாண்டு வணிகவியல்

## தனிமை



தனிமையில் இருப்பது மட்டும்
தனிமை அல்ல
எல்லோரும் அருகில் இருந்தும்
தனிமையை உணர்வது கூட
ஒரு தனிமைதான்.

இ. நிவேதா
இளநிலை முதலாண்டு உயிர்தொழில்நுட்பவியல்


கவிதைகள்

# கைப்பேசி



படிப்பு பாதியில் போனது
பணம் பறி போனது
நேரம் வீணாய்ப் போனது
மனம் கெட்டுப் போனது
மானம் காற்றில் போனது
இவையனைத்தும்
உன்னைக் கையில் வைத்திருந்ததால் தான் ...
உயிர்களைக் காப்பாற்ற உதவியது நீ
உலக நடப்புகளைத் தெரிவிப்பது நீ
படிப்பில் எழும் சந்தேகங்களைத் தீர்ப்பது நீ
மனிதன் வாழ்வில் முக்கிய பங்கு வகிப்பதும் நீ
இவையனைத்தும்,
உன்னைக் கையில் வைத்திருந்ததால்தான்
இப்படி, உன்னிடம் நல்லது, கெட்டது என
இரண்டையும் வைத்துள்ளாய்.
மனிதனான நாங்கள் தவறாக உன்னை
உபயோகித்துவிட்டு உன்னைக் குறைகூறுகிறோம்
கைப்பேசி  கூறுகிறது
இப்பொழுதாவது என்னைப் புரிந்துகொண்டீர்களே ...
அது போதும்.

ச. சக்திபிரியா
முதுநிலை இரண்டாமாண்டு
தமிழிலக்கியம்



# அம்மா

அம்மா, நீங்க போட்ட விதைகள்
எல்லாம் மலர்ந்து மலராகவும்
செடியாகவும் இருக்கும் அதில்
ஒரே ஒரு மலர் மட்டும்
நீங்க பெத்து எடுத்த
குழந்தையாக இருக்கும் அம்மா ...

அம்மா நீங்க சொல்லும்
ஒவ்வொரு அறிவுறுத்தல்களையும்
கேட்டுக்கொண்டு செயல்படுத்திக்கொண்டு
இருந்தேன் அம்மா ...
நீங்க அறிவுரைகளைச் சொல்லுவதைக்
கேட்டுக்கொண்டேன் அம்மா ...
அதை நான்
சாதித்துக்காட்டுவேன் அம்மா ...
அதைச் சாதித்துக்காட்டும் நாள்
என் அம்மாவிற்குத்தான்
நல்ல பெயர் கிடைக்கும்
அம்மா ...



கடவுளை நேரில் பார்க்கவில்லை
என்றாலும் கடவுள்
நம் முன்னாடிதான் இருக்கிறார்கள்
அம்மா மனதிற்குள்தான் இருக்கிறார்கள் கடவுள்
ஒவ்வொரு நாளும் அவங்களைக் கடவுள்
என்று நினைத்து வணங்கிக்கொண்டு
இருக்கிறோம் அம்மா
நீங்கதான் என் கடவுள் அம்மா ...

**இ. ஆனந்தி**
இளநிலை இரண்டாமாண்டு
தமிழிலக்கியம்

## கவிதைகள்

தடைகள் பல வந்தாலும்
கலங்கி நின்று விடாமல்,
நம்மால் முடியும் என்று,
நம்பிக்கையுடன் முயற்சி செய்
வெற்றி உனதாகும்.
சின்னஞ்சிறு இதயம், அதில் சிறகடிக்கும் கனவுகள்,
அத்தனையும் நிறைவேறும்,
உறுதியுடன் கூடிய விடாமுயற்சி இருந்தால்,
வேதனைகளும் சாதனைகளாய் மாறும்,
விடாமுயற்சி என்னும் விதை இருந்தால்...

ந. ஆப்ரின் நிஷா
இளநிலை முதலாண்டு தகவல் தொழில்நுட்பவியல்

## தோழி



தாயாகச் சோறு ஊட்டினாய் ...
தந்தையாகப் பாசத்தைப் பொழிந்தாய் ...
அண்ணனைப் போலப் பாதுகாத்தாய் ...
தம்பியைப் போல மகிழ்வித்தாய் ...
அக்காவைப் போலச் சண்டையிட்டாய் ...
ஒவ்வொரு உருவத்திலும் உன்னைக் கண்டேன் !
என்னுயிர் தோழியே ...
கண்ணாடியாய் மாறுகிறேன் ...
உன்னுடன் இருந்த நொடிகளில் ...
இன்பமான நினைவுகளை
நினைத்துக்கொண்டு கடக்கிறேன் ...
ஒவ்வொரு நிமிடமும்
மறக்காது என் கண்மணியே ...

சி. அ. ஹரிணி
இளநிலை இரண்டாமாண்டு இயற்பியல்

# முயற்சி

வெற்றிக் கோப்பை பெற வேகமாக இருப்பதை விட
விடாமுயற்சியுடன் இருக்க வேண்டும்
முடியும் வரை விடாமுயற்சி செய்
உன்னால் முடியும் வரை அல்ல
நீ நினைத்தது முடியும் வரை ....
மறைத்தாலும்
மீண்டும் உதிக்கும் சூரியனாய் மறைந்திடு ...
வீழ்ந்தாலும்
விரைந்தோடும் வீழ்ச்சியாய் விழுந்திடு ...
எழுந்தாலும்
நிமிர்ந்து நிற்கும் மலையாய் எழுந்திடு
எரிந்தாலும்
ஒளிவீசும் எரிகல்லாய் எரிந்திடு
மின்னல் வேகம் உனதாக்கு
தடுக்கும் தடைகளைத் தூளாக்கு
வெற்றிக் கொடியை நீ ஏந்து !
முள் குத்தியதால் நடக்க மறுக்கலாமோ?
தோல்வியுற்றதால் துவண்டு போகலாமோ?
புறந்தள்ளிப் பயணிப்போம்
வெற்றிகளை நாம் அடைவோம் ...
நீ வெற்றிக்காகப் போராடும்போது
வீண் முயற்சி என்று சொல்வார்கள்
நீ வெற்றி பெற்ற பின் விடாமுயற்சி என்பார்கள்
முயற்சி என்பது விதை போல
அதை விதைத்துக்கொண்டே இரு
முளைத்தால் மரம் இல்லையேல்
நிலத்திற்கு உரம் !!



இ. ஆனந்தி
இளநிலை இரண்டாமாண்டு
தமிழிலக்கியம்

## கவிதைகள்



பழகிய நாட்கள் சிறியதாக இருந்தாலும்
நினைவுடன் இருந்த நாட்கள் அதிகம் ...
புத்தகம்
...
கல் இல்லாமல் சிலை இல்லை
நீ இல்லாமல் என் உயிர் இல்லை ....
உடல் நீயாக இருந்தால்
உயிர் நானாக இருப்பேன்
என் மூச்சு தமிழாக இருக்கும்
உயிரைக் கொடு என்றாலும் கொடுப்பேன்
ஏனென்றால் நீதான் என் உயிர்
தமிழ்
...



உயிர் பிரிந்தாலும் என் நினைவுகள்
உன்னைச்சுற்றித்தான் இருக்கும்
புத்தக அறை
...
மனம் உடைந்தால் அழுது விடு ...
வேறு யாரும் நம்முடன் வரமாட்டார்கள்
கண்ணீரைத் தவிர ...
நண்பர்கள்
...
நிலவாக நீ இருந்தால்
நட்சத்திரமாய் நான் இருப்பேன்.
சிரிக்கும் உதடுகள் அதிகமாக இருந்தால்
அழும் உதடுகள் குறைவாகத்தான் இருக்கும்
வாழ்க்கை
...
மணலில் செய்யப்பட்ட ஓவியமாக
இருந்தால் மறந்து விடலாம்
என் மனதில் செய்யப்பட்ட ஓவியமாக இருக்கிறது...
பள்ளி வகுப்பறைகள்
...

## கவிதைகள்



காகிதமாக நீ இருந்தால்
உன்னை அழகான ஓவியமாக
மாற்றுவதற்கு நான் இருப்பேன்

**பென்சில்**

...



கனவில் இருக்கும் உன்னை
நினைவில் ஏந்துவேன் ...

**இளங்கலைப்பட்டம்**

...

மு. தேன்மொழி
இளநிலை முதலாண்டு தமிழிலக்கியம்

# என் பார்வையில் இரவு

கொஞ்சம் காற்று வீசும், கோடை மாத இரவு !
இரவு அழகை ஆக்கிரமிக்கும் நிலவு !
வானத்தை நான் நோக்க என்னை நோக்கும் பௌர்ணமி!
அத்துணை இரவுப் பொழுதையும் இனிமையாக
வருடும் இளந்தென்றல்;
தன்னைத் தானே மறந்து விட்டு முற்றத்தில் நான் !
வளைபோல் கூச்சலிடும் கிளைகள்;
நாட்டியம் ஆடும் நாற்பது அடி தென்னைமரம்!
மாடு வைக்கோலை முட்ட ஆங்காங்கே சத்தம்
கொலுசுமுத்து போல் கொட்டிக்கிடக்கும் விண்மீன்
அதில் சில....
என்னைப் பார்த்துச் சிரிப்பதைப் போல்
என் பிரம்மையின் தாலாட்டு !



க. ஆர்த்தி
இளநிலை முதலாண்டு
ஊட்டச்சத்து மற்றும் உணவுமுறை மேலாண்மையியல்


## கவிதைகள்

# பென்சில்



முழுமையாய் இருக்கின்றேன்
என்று எண்ணி இருந்தேன்
என்னுள் பாதியைத் தொலைத்த பின்புதான்
உணர்ந்தேன்....
இப்பொழுதுதான் நான்
பிறக்கிறேன் என்பதை !

# அழிப்பான்



குழந்தைகள் கைகளில் ஆறாகிறேன்
உருளுகிறேன், பிறழ்கின்றேன், ஓடுகின்றேன்,
நிறைந்திருக்கும் நான் குறைகின்றேன் !
மெல்லக் கரைகின்றேன் !
தவறுகளை அழிக்கின்றேன் !
பின் நானே அழிகின்றேன் !
முடிவில் மறைகின்றேன் !
மீண்டும் பிறக்கின்றேன் !
உன் தவறுகளை அழித்து
நல்லவை செய்வதற்காய் !

# சுண்ணக்கட்டி




வெள்ளைத்தாளில் பேனாவாக இல்லையென
வருந்தினேன்... பின்தான் உணர்ந்தேன்
கரும்பலகையில் தீட்டப்படும் ஆயுதம்
நான் என்பதை... வகுப்பறையில் இருந்தபடி !

இ. வாசுகி
இளநிலை இரண்டாமாண்டு
கணினி அறிவியல்

# அம்மா

ஒவ்வொரு நாளும்
தன் பிள்ளையை
நினைத்துக் கவலைப்படுவாள்
ஆனால் தன்னைப் பற்றி
ஒருநாளும் கவலைப்படாத
ஒரே ஜீவன் தாய் ....
வார்த்தைகளே இல்லாத வடிவம் ...
அளவு இல்லாத அன்பு ...
சுயநலமே இல்லாத இதயம் ....
அவள்தான் அம்மா
மீண்டும் ஒருமுறை
குழந்தையாய்ப் பிறந்து
எல்லாத் துன்பங்களையும் களைந்து
உன் மடியில் தூங்க ஆசை அம்மா
என் உலகில் நம்பிக்கை
அன்பு கருணை என்ற
சொற்களுக்கு அடையாளம்
என் அன்னையைத் தவிர
வேறு யாருமில்லை.



செ. மேகலா
முதுநிலை முதலாண்டு
தமிழிலக்கியம்

# தோழி

அன்பால் அரவணைத்து...
ஆறுதலாய்த் துணை நின்று...
இன்பத்தைப் பகிர்ந்து...
ஈகையுடன் வாழக் கற்றுத் தந்து...
உள்ளத்துடன் கலந்து...
ஊக்கம் அளித்து...
என்னைப் பாதுகாத்து...
ஏடாய் அமைத்து...
ஐயத்தை நீக்கி...
ஒற்றுமையாய் என்னோடு இருந்து...
ஓடமாய் என்னைச் சுமந்த நீ...
எனக்குத் தெய்வமே...
என் அன்புத் தோழியே...
கடல் போல் ஆழமானது...
உன் அன்பு...
இனிப்பைப் போல் சுவையானது...
உன் பண்பு...



**சி.அ. ஹரிணி**
இளநிலை இரண்டாமாண்டு
இயற்பியல்

# தாய்



கருவாக எனைச் சுமந்து
உருவாக்கி ஈன்றவளே!
உன் உயிராக எனை நினைத்து
உலகுக்குத் தந்தவளே !
இரவினிலே உறங்காமல்
எனக்காக விழித்தவளே !
உறவையெல்லாம் எனக்காகப் பழித்தவளே!
உன் உதிரத்தைப் பாலாக்கிக் கொடுத்தவளே!
உன் பசியை நீ போக்க
உணவுண்ணும் வேளையிலே ...
என் அழுகுரலைக் கேட்டதுமே
அரை வயிறாய்ச் சென்றவளே!
ஒத்த நாள் முழுக்கக் கொட்டித் தீர்த்த மழை
பொத்தல் குடிசையிலே புகுந்து ஓடிவர
பெத்த புள்ளையெல்லாம் கத்திக் கூச்சலிட
மொத்த நீரையுமே வாரி இறைச்சவளே!
காடு கழனியெல்லாம் ஓடி உழைச்சவளே!
மெத்த நான் படிக்க மேனி இளைச்சவளே!
தெய்வத்த நம்பாத உன் புள்ள முன்னாடி
நடமாடும் தெய்வமெனத் தினந்தோறும் நின்றவளே !

தா. பார்கவி
இளநிலை முதலாண்டு
ஆங்கிலம்

# அதிசயப் பெண்

நகர்ந்து வரும் உலகில்
பெண் என்பவள் அதிசயமே ..!
பிறப்பவளும் பெண்ணே ..!!
பிறப்பெடுப்பவளும் பெண்ணே ..!!
ஒரு குழந்தையைப் பெற்று எடுப்பதிலிருந்து,
அச்சிறு மழலை
தவழ்ந்து, உருண்டு
சிரித்து, முணுகி
மண்டியிட்டு, நடந்து
எழுந்து நடப்பதற்கு
கை கொடுப்பதோடு மட்டும் அல்லாது
அச்சாணியாக விளங்கியும்
வளர்ந்த பிள்ளையைச்
செல்லம் கொஞ்சியும், திட்டியும்
பள்ளிக்குச் சீர்பட அனுப்பியும்
உண்ண உணவும்,
உடுத்த உடையும் என்று
தன் கண்களால் அழகு கண்டும்,
பாடம் மட்டும் அல்லாது
உலக வாழ்வியலைக் கற்றுத் தந்தும்
பண்பும் பணிவும்
செயல்பட அறிந்து
தன் வியர்வைத் துளிகளைப் பணமாக மாற்றி

அழியாத கல்விச் செல்வத்தை ஊட்டி
இன்பத் துன்பங்களை எடுத்துரைத்து
பெற்ற செல்வங்களை ஆளாக்கி
மற்றோர் கையில் தன் பிள்ளையைக் கொடுத்து
வளமான வாழ்க்கையில்
வளம் பல பெற்று
அன்றாடம் எழுந்து
அதிகாலை சமைத்து
அயராது உழைத்து
அஞ்சாமல் நடந்து
பார் போற்றும் உலகிலே
தேர் மீது வருபவளும் பெண்ணே ..!!
அத்தேர் மீது வலம் வரும் பெண்ணை
அதிசயம் என்று சொல்வது
முறைதானே ..!!

ப. ஸ்வேதா
முதுகலை முதலாண்டு
தமிழிலக்கியம்



## பொன்மொழிகள்

✦ இந்த உலகம் ஒரு கலைக்கூடம் போன்றது
அதில் ஆயிரம் கலைகள் பங்கேற்கும்...
ஆனால் அதில் நீ பொய்க் கலையில் பங்கேற்றால்,
அது உன் கலைக்கும் துன்பம்
உனக்கும் துன்பம்....

✦ நாம் என்னதான் தவறாக எழுதினாலும்
அழிப்பான் பயன்படுகிறது...
ஆனால் நம் வாழ்க்கையில் நடக்கும்
தவறுகளை அழிக்க எந்த அழிப்பானும் பயன்படாது...
எனவே நம் வாழ்க்கையில் நடக்கும்
எந்தத் தவறும் மற்றவருக்குப் பொறுப்பல்ல...
அதற்கு நாம்தான் பொறுப்பு.

✦ ஒரு கவிஞன் இயல்பாக கவிஞன் ஆவதில்லை ...
அவன் கவிஞனாவதற்குக் காரணம்
அவனது நம்பிக்கையாக இருக்கலாம்
அல்லது வலியாக இருக்கலாம்....

✦ ஒருவன் இவ்வுலகில் அழகாகத் தெரியவேண்டுமென்றால்...
தங்கமோ, வைரமோ அணியத் தேவையில்லை....
ஒரு புன்னகை அணிந்த சிரிப்பு மட்டும் போதும்...

✦ இவ்வுலகில் நடக்கும் ஏமாற்றங்களைப் பார்க்க
கண் இல்லாதவராலும் முடியாது...
கண் இருப்பவராலும் முடியாது...
இதுவே வாழ்க்கையின் நியதி...

கோகிலா
இளநிலை முதலாண்டு ஆங்கிலம்

## அறிஞர்கள் பொன்மொழிகள்

* ஆயிரம் நூல்களிலிருந்து பெற முடியாத ஞானங்களை ஓர் அனுபவம் உணர்த்தும். **- ஜெயகாந்தன்**

* லட்சியம் என்பது நட்சத்திரம் போல, அதைக் கைக்குள் அடக்க முயன்றால் தோல்வி நிச்சயம். அதன் பாதையைப் பின் தொடர்ந்தால் வெற்றி நிச்சயம். **- கார்ல்ரூஸ்**

* ஒவ்வொரு விழிப்பற்ற செயலிலும் அதற்குரிய தண்டனை நிழல்போல வருகிறது. **- ஓஷோ**

* ஒழுக்கம் போர்க்களம் போன்றது. ஓயாமல் போராடிக்கொண்டே இருக்க வேண்டும். **- ஓஷோ**

* உன்னைத் தவிர வேறு யாரும் உனக்கு அமைதியைத் தர முடியாது. **- எமர்சன்**

* ஒரு நல்ல நூல் ஒரு நல்ல மனிதனுக்கு நல்ல சொத்தாகும்.

**- வில்லியம் ஹாஸ்விட்**

* துயரத்திற்கு ஒரே மாற்று மருந்து சாதனைதான்.

**- ஹென்றிலீவ்ஸ்**




பா. சாரணி
முதுநிலை இரண்டாமாண்டு
தமிழிலக்கியம்

## பொன்மொழிகள்

# அறிஞர்கள் பொன்மொழிகள்

* எல்லாத் துன்பங்களுக்கும் இரண்டு மருந்துகள் உண்டு.
ஒன்று காலம், இன்னொன்று மௌனம்.

**- அப்துல் கலாம்**

* சிந்தனைதான் உன்னைத் தூண்டி
உன்னை வேலை செய்ய வைக்கிற உந்து சக்தி
எனவே உன் மனதை
மிக உயர்ந்த சிந்தனைகளால் நிரப்பிவிடு

**- சுவாமி விவேகானந்தர்**

* எவனையும் வெற்றுக் காகிதம் என எண்ணாதே
அவன் பட்டமாய்ப் பறப்பான்
நீயும் அண்ணாந்துதான் பார்க்க வேண்டும்

**- பாரதியார்**

* மலையைப் பார்த்து வியந்து விடாதே ... !
மலை மீது ஏறினால் அதுவும் உன் காலின் கீழ்தான் ... !
சில வெற்றிகளும் கூட... !

**- பாரதியார்**

* ஆண்டவன் சோதிப்பது எல்லோரையும் அல்ல ...
உன்னைப் போல் சாதிக்கத்
துடிக்கும் புத்திசாலிகளை மட்டுமே !

**- அப்துல் கலாம்**

* தர்மத்தாலும், கருணையாலும் பெறப்படும் வெற்றியே
நிலைபெற்று நிற்கும்.
அதர்மத்தைத் தர்மத்தாலும், தீமையை நன்மையாலும்தான்
வெல்ல முடியும்.

**- பாரதியார்**



கு. லிஷா
இளநிலை முதலாண்டு வணிகவியல்

# பொன்மொழிகள்

- வாழ்க்கையில் உயிருக்கு அடுத்தபடியாக ஒரு மனிதன் இன்னொருவருக்கு அளிக்கக்கூடிய ஒப்பற்ற பரிசு நம்பிக்கைதான்.
- உயர்ந்த லட்சியத்தை நோக்கி, நடைபோடுபவனை நோக்கி அந்த லட்சியமும் நடைபோடும்.
- மனதில் நினைப்பதைச் சொல்ல வேண்டும், இல்லையெனில் மௌனமாக இருப்பதே சிறந்தது.
- இந்த உலகத்தில் எப்போதும் நிலைத்திருக்கும் சக்தி உண்மைக்குத்தான் உண்டு.
- கோபத்தை அன்பினாலும் தீமையை நன்மையினாலும் வெல்.

க. காவியா
முதுநிலை இரண்டாமாண்டு தமிழிலக்கியம்

- கற்பனை செய்யத் தெரிந்தவர் சிறகு அல்லாத பறவையைப் போன்றவர்.
- புத்தகங்கள் காலக் கடற்கரையில் நிறுத்தப்பட்ட கலங்கரை விளக்கங்கள்.
- வாழ்க்கையில் திரும்பப் பெற முடியாதவை உயிரும், நேரமும், சொற்களும்.
- அறியாமையிலிருந்து பிறப்பதே அச்சம்.
- நாட்டின் எதிர்காலம் வகுப்பறைகளில்தான் உருவாகிறது.
- சாதனையாளர்கள் சிற்பத்தையும், சிற்பியையும் மட்டுமல்ல உலகத்தையே செதுக்குகிறார்கள்.

பா. சாரணி
முதுநிலை இரண்டாமாண்டு
தமிழிலக்கியம்

## பொன்மொழிகள்

1. முகத்தைக் காட்டுவது கண்ணாடி,
மனதைக் காட்டுவது முகம்.

2. தண்ணீருக்கேற்ப தாமரை உயரும்,
ஊக்கத்தைப் பொறுத்து வாழ்க்கை உயரும்.

3. உள்ளத்தில் ஒன்றை வைத்து
வெளியில் ஒன்றை வைத்துப் பேசுபவரை விலக்கு.

4. என் நெஞ்சமே எனக்கு உறவாக வரவில்லை என்றால்,
மற்றவர் எப்படி வருவார்கள்.

5. உழவுத்தொழில் இல்லையென்றால், துறவிகளுக்கும்
வாழ்க்கையில்லை.

6. சோம்பேறியிடம் மூதேவியும் அது இல்லாதவரிடம்,
திருமகளும் குடியிருப்பர்.

7. ஒருவர் இல்லாதபோது அவரைக் குறை சொல்பவரை,
பாவமென இவ்வுலகம் சுமக்கிறது.

8. வீரம்மிகுந்த யானை சேற்றில் சிக்கினால்,
நரியும் வெல்லும்.

9. கல்லாததைக் கற்றேன் என்றால் கற்றதும்
பொய்யென நினைப்பர்.

10. ஒருவன் பெற்ற கல்வி அடுத்தடுத்த தலைமுறைக்கும்
புகழைத் தரும்.

11. தந்தை சொல்வதைவிட நன்மை தரக்கூடிய சொல் எதுவும்
இல்லை.

## பொன்மொழிகள்

12. முகத்தைப் பார்த்து மனதை அறியாதவரின் கண்களால் பயனில்லை.

13. மற்றவர் செய்த தீங்கிற்காக நாமும் தீங்கு செய்தல் கூடாது.

14. கல்வி இல்லாவிடினும், ஒழுக்கமில்லாமல் இருப்பதே அவமானம்.

15. பொய்யான நண்பனைவிட, பகைவரால் பல நன்மை கிடைக்கும்.

16. கற்றோர் அவையில் கல்லாதவன் சிறப்பாகப் பேச முடியாது.

17. கற்றவருக்கு எல்லா ஊரும், எல்லா நாடும் தன்னுடையதே.

18. எந்தச் சூழ்நிலையிலும் தன்மானத்தோடு வாழவேண்டும்.

19. நட்பு போல் காப்பவனும், உயர்ந்த உறவும் வேறில்லை.

20. பிறர் செய்த நன்மையை மறவாதே, தீமையை மற.

ப. ரோகினி
முதுநிலை முதலாண்டு தமிழிலக்கியம்



## பொது அறிவு

1. வைட்டமின் C என்பது என்ன?
   **ஆக்ஸிஜனேற்றி**

2. எந்த வைட்டமின் குறைபாடு ஆபத்தான இரத்த சோகைக்குக் (Pernicious aneamia) காரணமாகிறது?
   **வைட்டமின் B12**

3. குழந்தைகளின் புரோட்டீன் குறைபாடு நோய் எது?
   **குவாஷியோர்கர் மற்றும் மரஸ்மஸ்**

4. 100 மில்லி மனிதப் பாலில் எவ்வளவு புரதம் உள்ளது?
   **1.2 கிராம்**

5. நீரில் கரையக்கூடிய வைட்டமின் எது?
   **வைட்டமின் C**

6. ஈறுகளில் இரத்தக்கசிவு உள்ள குழந்தைக்கு எந்த உணவைப் பரிந்துரைப்பீர்கள்?
   **சிட்ரஸ் பழங்கள்**

7. எந்த நோய் வைட்டமின் B5 உடன் தொடர்புடையது?
   **எலும்புகளில் கால்சியம் இழப்பு**

8. மனித உடலில் இரத்தம் பாயாத பகுதி எது?
   **கருவிழி**

9. "உலக நோய் தடுப்பு தினம்" எப்போது கடைபிடிக்கப்படுகிறது?
   **நவம்பர் 10**

10. மனிதனின் சுவாச மையம் மூளையின் எந்தப் பகுதியில் உள்ளது?
    **முகுலம்**

செ. நிவேதா
இளநிலை முதலாண்டு
ஊட்டச்சத்து மற்றும் உணவுமுறை மேலாண்மையியல்

## பொது அறிவு

1. தர்மச் சக்கரத்தின் இடப்புறம் அமைந்துள்ள விலங்கு எது ?

**குதிரை**

2. இந்தியாவின் மிகப்பெரிய கொடியின் பறக்கும் அளவு என்ன ?

**48 x 72 அடி**

3. எந்த ஆண்டு தேசியகீதம் முதலில் பாடப்பட்டது ?

**1911**

4. உலகிலேயே மிகப் பெரிய எண்ணெய் வயல் உள்ள இடம் எது ?

**சவுதி அரேபியா**

5. தமிழில் தோன்றிய முதல் பிள்ளைத் தமிழ் நூல் எது ?

**குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ்**

6. இந்தியாவின் மிக உயர்ந்த இலக்கிய விருது எது ?

**ஞானபீட விருது**

7. அதிக மக்கள் அடர்த்தியைக் கொண்ட கண்டம் எது ?

**ஐரோப்பா**

8. இங்கிலாந்திடம் இருந்து அமெரிக்கா எந்த ஆண்டு சுதந்திரம் பெற்றது ?

**1783**

9. “பஞ்சாப் கேசரி” என்றழைக்கப்பட்ட தேசியத்தலைவர் யார் ?

**லாலா லஜபதிராய்**

10. உணவுப் பாதையின் சராசரி நீளம் எவ்வளவு ?

**எட்டு மீட்டர்**

மா. பவதாரணி
இளநிலை முதலாண்டு
தகவல் தொழில்நுட்பவியல்

## பொது அறிவு

1. சாதி மதம் அற்றவர் என்ற சான்றிதழைப் பெற்ற முதல் இந்தியர் யார் ?
**சினேகா பார்த்திபராஜா**

2. கடவுளின் தேசம் என்று அழைக்கப்படுவது எது ?
**கேரளா**

3. சூரியனை நேருக்கு நேர் பார்க்கக் கூடிய பறவை எது ?
**கழுகு**

4. இரண்டு தேசிய கீதங்களைக் கொண்ட நாடு எது ?
**ஆஸ்திரேலியா**

5. முத்துராமலிங்கரைத் தேசியம் காத்த செம்மல் என்று பாராட்டியவர் யார் ?
**திரு.வி.க.**

6. மதராஸ் மாகாணத்தைத் தமிழ்நாடு எனப் பெயர் மாற்றியவர் யார் ?
**அறிஞர் அண்ணா**

7. லட்சத்தீவில் மொத்தம் எத்தனை தீவுகள் உள்ளன ?
**27 தீவுகள்**

8. உலகம் உருண்டையானது எனக் கூறிய முதல் தமிழ் நூல் எது ?
**முதுமொழிக்காஞ்சி**

9. முதல் சுதந்திரப் போரில் ஆண் வேடமிட்டு ஆங்கிலேயருடன் போரிட்டவர் யார் ?
**ஜான்சி ராணி**

10. இந்தியாவில் அதிக பெண் நீதிபதிகள் உள்ள மாநிலம் எது ?
**தமிழ்நாடு**

ச. இனியா
முதுநிலை இரண்டாமாண்டு
தமிழிலக்கியம்

# பொது அறிவுகள்

* சோழர்களின் ஏரி என அழைக்கப்படுவது எது ?

  **- வங்காள விரிகுடா**

* இந்தியாவின் இளம் மலைத்தொடர் எது?

  **- இமயமலை**

* உயிரியல் கவிஞர் என்றழைக்கப்படுபவர் யார் ?

  **- சர் ஜெகதீஷ் சந்திரபோஸ்**

* ஏழைகளின் ஊட்டி என்றழைக்கப்படும் இடம் எது?

  **- ஏற்காடு**

* பீகாரின் சோகம் என்றழைக்கப்படும் நதி எது?

  **- கோசி நதி**

* தேசிய இரசாயனப் பரிசோதனைச் சாலை எங்குள்ளது?

  **- பாட்னா**

* இந்தியாவின் பசுமைப் புரட்சி சிற்பி யார்?

  **- எம்.எஸ். சுவாமிநாதன்**

* இந்தியாவின் மிகப் பழமையான மலைத்தொடர் எது?

  **- ஆரவள்ளி மலைகள்**



பா. சாரணி
முதுநிலை இரண்டாமாண்டு
தமிழிலக்கியம்

கட்டுரைகள்

# இயற்கை

**குறிப்புச்சட்டகம்**

**முன்னுரை**
**இயற்கையின் சிறப்பு**
**இயற்கை பற்றி வள்ளுவர்**
**இயற்கை மாசடைதல்**
**இயற்கையைப் பாதுகாத்தல்**
**முடிவுரை**

## முன்னுரை

இயற்கை இறைவனின் இணையில்லா ஓவியம் என்பது இயற்கை பற்றிய அழகிய பொன்மொழி. இப்பூமியானது இயற்கையின் கொடைகளால் நிறைந்துள்ளது. இயற்கை இல்லாமல் மனிதனால் வாழ இயலாது. நாம் அருந்துகின்ற நீரில் இருந்து உண்ணுகின்ற உணவு வரை அனைத்தும் இயற்கையில் இருந்தே கிடைக்கிறது. இக்கட்டுரையில் இயற்கை பற்றிய சிறப்பினைக் காணலாம்.

## இயற்கையின் சிறப்பு

இந்தப் பூமியில் பரந்து விரிந்த நிலப்பரப்பும், கடல்களும், காடுகளும், ஆறுகளும், நீர்வீழ்ச்சிகளும் வளங்களாக அமைந்துள்ளன. அனைத்து உயிரினங்களும் நிலைபெற்று வாழ மழை, காற்று, தீ, நிலம், நீர் போன்ற பஞ்சபூதங்கள் தேவை. இந்த இயற்கையானது இல்லாவிட்டால் மனித இனமே அழிந்துவிடும். இத்தகைய சிறப்பு வாய்ந்த இயற்கையைப் பாதுகாக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

## இயற்கை பற்றி வள்ளுவர்

**மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்**
**காடும் உடையது அரண்**

என்ற குறளில் வள்ளுவர் தெளிந்த நீரும், வெட்ட வெளியான நிலமும், மலையும், அழகிய நிழல் உடைய காடும் கொண்டுள்ளதே,

பாதுகாப்பான நல்ல அரண் ஆகும் என்று இயற்கை பற்றி அழகுறக் கூறுகிறார்.

**இயற்கை மாசடைதல்**

இயற்கையில் உள்ள விலைமதிக்க முடியாத வளங்களான நிலம், நீர், காற்று போன்றவை பல்வேறுபட்ட காரணங்களால் மாசடைதலே இயற்கை மாசடைதல் ஆகும். இதற்குத் தொழில் மயமாக்கல் மற்றும் மனிதர்களின் செயல்களே காரணங்களாக அமைகின்றன. தொழிற்சாலைக் கழிவுகள், நெகிழிப் பயன்பாடு, வாகனங்களில் இருந்து வெளியேறும் புகை, காடுகளை அழித்தல், மண் வளம் சுரண்டல், கனிமவளக் கொள்ளை போன்றவை இயற்கை மாசடைவிற்கு முக்கியக் காரணங்கள் ஆகும்.

**இயற்கையைப் பாதுகாத்தல்**

இயற்கையைப் பாதுகாப்பது ஒவ்வொரு தனி மனிதனின் கடமை ஆகும். உலகிலுள்ள இயற்கை வளங்களைப் பாதுகாப்பதற்காகவும், விழிப்புணர்வை உருவாக்குவதற்காகவும் உலக இயற்கைப் பாதுகாப்பு தினம் ஜூலை 28ஆம் தேதி அனுசரிக்கப்படுகிறது.

எனவே நிலம், நீர், காற்று மாசுபாட்டைக் குறைக்க வேண்டும். நெகிழி பயன்பாட்டைக் குறைக்க வேண்டும். மரங்களை வளர்த்து இப்பூமியைப் பசுமையானதாக மாற்ற வேண்டும். தேவைக்கு மட்டுமே இயற்கையைப் பயன்படுத்த வேண்டும்.

**முடிவுரை**

அறிவியல் வளர்ச்சி காரணமாக இயற்கை அழிந்து கொண்டு வருகிறது. அறிவியல் இந்த உலகிற்கு எந்த அளவிற்கு முக்கியமோ அதே அளவிற்கு இயற்கை வளங்களும் முக்கியம். இயற்கையின்றி மனிதனால் வாழ முடியாது. இதனைப் புரிந்து இந்த இயற்கை வளங்கள் நமக்கு மட்டுமன்றி வருங்காலச் சந்ததியினருக்கும் பயன்படும் வகையில் பாதுகாப்போம்.

**நெகிழியைத் தவிர்ப்போம் !**
**இயற்கையைக் காப்போம் !**

ரா.கு. அர்ச்சனா
முதுநிலை முதலாண்டு தமிழிலக்கியம்

கட்டுரைகள்

# மலைவாழ் மக்களின் வாழ்க்கை முறையும் உணவு முறையும்

## குறிப்புச்சட்டகம்

முன்னுரை
பழங்குடியினரின் வகைகள்
வாழ்க்கை முறை
முடிவுரை

**முன்னுரை**

பழங்குடிகள் என்போர் பன்னெடுங்காலமாக (10,000 ஆண்டுகளுக்கும் மேலாக) ஒரு நிலப்பகுதியில் வாழ்ந்து வருபவர்கள். இவர்கள் தங்களுக்கெனத் தனி பழக்க வழக்கங்களும், மொழிகளும், நிலங்களும் கொண்டு அதனைச் சார்ந்த செடி, கொடி, மரம், விலங்குகளைக் கொண்டு தங்கள் வாழ்க்கையைத் தன்னிறைவோடு வாழ்பவர்கள். தனி மனித வாழ்க்கையிலும், உறவு முறைகளிலும் குழுவாக வாழ்வதிலும் தங்களுக்கெனத் தனியான முறைகள் கொண்டவர்கள்.

**பழங்குடியினரின் வகைகள்**

தமிழகத்தில் 40க்கும் மேற்பட்ட வெவ்வேறு பழங்குடிகள் உள்ளனர். தமிழ்நாட்டில் 30 மாவட்டங்களில் பழங்குடிகள் வாழ்கிறார்கள். இருளர், காடர், குறும்பர், தோடர் போன்றோர்கள் பழங்குடிகளில் சிலர் முதன் முதலில் எட்கர் தர்ஸ்டன் என்பாரும், பின்னர் அனந்த கிருஷ்ண அய்யர், முனைவர் அய்யப்பன் போன்ற அறிஞர்களும் பழங்குடிகளைப் பற்றிய ஆய்வுகள் செய்துள்ளனர்.

| | பழங்குடி பெயர் | வாழும் பகுதி | மொழி |
|---|---|---|---|
| 01. | **அரநாடன்** | கோவை, ஆனைமலை | மலையாளக் கிளை மொழி |
| 02. | **இருளர்** | கோவை, சேலம், காஞ்சிபுரம் | இருளமொழி தமிழ் கிளைமொழி |

| | | | |
|---|---|---|---|
| 03. | **குறும்பர்** | நீலகிரி, திருச்சி, திண்டுக்கல் | குறும்பா மொழி |
| 04. | **சோளநாயகர்** | நீலகிரி | கன்னடக் கிளைமொழி |
| 05. | **பதிமலசார்** | கோவை, ஆனைமலை | தமிழ்கிளைமொழி |
| 06. | **மலையாளி** | கொல்லிமலை, ஏலகிரி பச்சைமலைக் குன்றுகள் | தமிழ்மொழி |

**வாழ்க்கை முறை**

தற்கால மக்களிடம் அதிகம் பழகாமலும், பணத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரம் இல்லாமலும், தற்காலத் தொழில் வளர்ச்சி வழி பெற்ற புதிய பொருட்கள், வசதிகள் எதையும் பெரியதாக ஏற்றுக் கொள்ளாதவர்களுமாக இருக்கிறார்கள். பழங்குடியின மக்களின் கலைகள், பண்பாடு, கலாசாரம், கதைகள், மொழி, நடனம், வாழ்வியல் முறைகள், விவசாய முறைகள், சமயச் சடங்குகள், வாழ்வியல் சடங்குகள், விளையாட்டுகள் ஆகியவற்றைப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் ஆகஸ்ட் 9ஆம் நாள் ஐக்கிய நாடுகள் சபை உலகப் பழங்குடி மக்கள் தினமாக அறிவித்துள்ளது.

**முடிவுரை**

கலாச்சாரப் பன்முகத்தன்மை, நிலையான வாழ்க்கை நடைமுறைகள் மற்றும் சுற்றுச்சூழல் சமநிலை ஆகியவற்றைப் பாதுகாப்பதில் மலைவாழ் மக்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். அவர்களின் உரிமைகளை மதிப்பது மற்றும் அவர்களின் பாரம்பரிய வழிமுறைகளைப் பாதுகாப்பதற்குரிய மேம்பாட்டு உத்திகளை ஊக்குவிப்பது மிகவும் முக்கியமானதாகும்.

செ.ரோஷினி
முதுநிலை இரண்டாமாண்டு
ஊட்டச்சத்து மற்றும் உணவுமுறை மேலாண்மையியல்

# பாரம்பரிய உணவும் அதன் பயன்பாடும்

## குறிப்புச்சட்டகம்

முன்னுரை
ஆரோக்கியமான உணவு
சித்த மருத்துவத்தின் அறிவுரை
முடிவுரை

### முன்னுரை

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பது பழமொழி. அத்தகைய நோயற்ற வாழ்வு வாழ்வதற்கு உணவே மருந்து என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். நமது பாரம்பரிய மருத்துவ முறையான சித்த வைத்தியமும் அதைத்தான் அறிவுறுத்துகிறது. குழந்தைப் பருவம் முதலே சத்தான உணவினை ஊட்டச்சத்துடன் சேர்த்துக் கொடுத்து வர வேண்டும்.

**உணவே மருந்து**

**மருந்தே உணவு**

இம்முறையை, நாம் பின்பற்றினால் மனித குலத்தை அச்சுறுத்தி வரும் நீரிழிவு, உடல் பருமனாதல், அதிக இரத்த அழுத்தம் போன்ற பல்வேறு நோய்களைக் கட்டுப்படுத்த முடியும். புற்றுநோய்க்குக் கூட முற்றுப்புள்ளி வைக்க முடியும்.

### ஆரோக்கியமான உணவு

ஆரோக்கியமான உணவு என்பது போதுமான அளவில் நுண்ணூட்டச்சத்துக்கள் அடங்கியது. கிட்டத்தட்ட 40-க்கும் மேற்பட்ட சத்துகள் நம் உடலுக்கு இன்றியமையாதவையாக உள்ளன. அதில் கார்போஹைட்ரேட் எனும் சர்க்கரை, புரதம், கொழுப்பு, வைட்டமின்கள், தாது உப்புகள், நார்ச்சத்துக்கள் ஆகிய அனைத்தும் அடங்கியதுதான் ஊட்டச்சத்து மிக்க உணவு.

## சர்க்கரை நோயைத் தடுப்போம் : நூறு வயது வாழ்வோம்.

நம்மில் பலரும் சர்க்கரைச் சத்து அதிகமுள்ள அரிசி போன்ற உணவினை மட்டும் தினந்தோறும் உண்டு வருகிறோம். இது நம் உடலிலுள்ள சர்க்கரை அளவை அதிகப்படுத்தும். இந்த உணவைத் தொடர்ந்து உண்பதே நீரிழிவிற்கு அடிப்படைக் காரணமாகும்.

### பாரம்பரிய உணவு : நோய் போக்கும் மருந்து

அரிசி உணவோடு நம் பாரம்பரிய உணவாக உள்ள பருப்பும், நெய்யும் சேர்த்து எடுத்தால் சர்க்கரைச் சத்தோடு, புரதமும், கொழுப்புச் சத்தும் கூடுகிறது. இதனை அறிந்தே, நம் முன்னோர்கள் தங்கள் உணவுப் பழக்கத்தை அமைத்துக் கொண்டனர்.

புரதங்கள் நம் உடலினை நோய்க் கிருமிகளிடமிருந்து காக்கும் அரண்கள். மாமிச வகைகளோடு, முளைகட்டிய தானியங்களும், பயிறு வகைகளும் கூட புரத உணவின் ஆதாரங்களே.

தாவரங்கள் மூலமாகப் பெறும் கடலை எண்ணெய், நல்லெண்ணெய் ஆகியவற்றில் வைட்டமின் இ, பிற தாது உப்புகள், நன்மை தரும் வேதிப்பொருட்கள் உள்ளன. பால் பொருட்களிலும், மாமிச உணவுகளிலும் மட்டுமே கொழுப்பு உள்ளது குறிப்பிடத்தக்கது.

### சித்த மருத்துவத்தின் அறிவுரை

பிஞ்சுக் காய்கறிகளில் நார்ச்சத்துக்கள் அதிகளவு உள்ளன. எல்டிஎல் எனப்படும் கெட்ட கொழுப்பு, நமது இருதயத்திலுள்ள சிறிய ரத்த குழாய்களைப் பாதித்து மாரடைப்பை ஏற்படுத்தும். இன்று பெரியதாகிவிட்ட நொறுக்குத் தீனிப் பழக்கத்தால், நார்ச்சத்து உணவுகளை எடுத்துக்கொள்வது குறைந்துவிட்டது. நார்ச்த்துக்கள் பல்வேறு நோய்களை வரவிடாமல் தடுக்கும் இயற்கை மருந்துகள்.

நம் முன்னோர்கள் கீரைகளை நெய்விட்டு வதக்கி உண்ணச் சொன்ன காரணம் அவற்றிலுள்ள சத்துக்களையும், வேதிப்பொருட்களையும் நம் உடலுக்கு முழுமையாக அளிக்கவே ஆகும்.

தீட்டப்பட்ட அரிசியில் தையமின் எனும் வைட்டமின் பி1 இழக்கப்படுவதால் நம் முன்னோர் அன்றே கைக்குத்தல் அரிசியைப் பயன்படுத்தி நோய்கள் தம்மை நெருங்காமல் காத்துக் கொண்டனர்.

அசைவ உணவுகளை நூறு டிகிரிக்கு மேல் வறுக்கும்போது ஹைட்ரோ சைக்ளிக் அமின் (ஹெ.சி.அ) என்னும் வேதிப்பொருள் உண்டாகிறது. இது நம் உடலில் இயற்கையாக உள்ள டி.என்ஏ. வைச் சிதைத்து, புற்றுநோயை உண்டாக்கும். எனவே அசைவ உணவுகளைக் குழம்பு போன்ற பக்குவத்தில் சமைத்து உண்டனர் நம் முன்னோர்.

இரும்புச் சத்து உள்ள உணவை உட்கிரகிக்க, வைட்டமின் சி அவசியம். இதனை அறிந்துதான் நம் முன்னோர் இரும்புச் சத்தைச் சேர்ந்த சித்த மருந்துகளைத் தயாரிக்க எலுமிச்சை சாற்றைப் பயன்படுத்தியுள்ளனர்.

**முடிவுரை :**

நாமும் பாரம்பரியம், ஆரோக்கியம் மிக்க உணவு முறைகளைப் பின்பற்றினால் நோயில்லாமல் ஆரோக்கியமாக நீண்ட நாள் வாழலாம். நம் எதிர்காலச் சந்ததியினரையும் நோயில்லா வாழ்வை வாழ வழிவகை செய்யலாம்.

ப. கிருத்திகா
முதுநிலை இரண்டாமாண்டு
ஊட்டச்சத்து மற்றும் உணவுமுறை
மேலாண்மையியல்

# கல்வி

## குறிப்புச்சட்டகம்

முன்னுரை
கல்வி என்பது விளக்கு
கல்வியின் சிறப்பு
கல்வியின் முக்கியத்துவம்
கல்வியின் பயன்கள்
கல்வியில் உயர்ந்தவர்கள்
முடிவுரை

**முன்னுரை :**

இன்றைய உலகில் மிகப்பெரிய செல்வமாகக் கருதுவது கல்விச் செல்வமாகும். இந்தச் செல்வத்தினை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். மனிதனாகப் பிறப்பது அரிது. அரிதான அப்பிறப்பினைப் பெற்றுவிட்டால் கல்விச் செல்வத்தினைப் பெற்றுக் கொள்வது சிறப்பு.

**கல்வி என்பது விளக்கு :**

கல்வி என்பது அறியாமை என்னும் இருளை விலக்கும் அறிவுச்சுடராகும். கல்வியினை அனைவரும் அவசியமாகக் கற்றுக்கொள்ள வேண்டும். கல்வியின் பயன்கள் ஏராளம். அவற்றைச் சரியாகக் கற்றுக் கொண்டால் அதிகம் பயனடையலாம்.

கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்கு தக

என்னும் குறளின் பொருளுக்கேற்ப கற்க வேண்டிய நூல்களைக் குற்றமறக் கற்க வேண்டும். கற்றதற்கு ஏற்றவாறு பயன் நம்மை வந்து சேரும். கற்பவைக்கு ஏற்றவாறு நிற்க வேண்டும்.

**கல்வியின் சிறப்பு:**

எத்தனை செல்வங்களை இழந்தாலும், கல்விச் செல்வத்தை எக்காரணத்திற்காகவும் இழக்கக் கூடாது. கல்விச் செல்வம் நெருப்பினால் வேகாது, வெள்ளத்தால் அழியாது, கள்வர்களால் திருட முடியாது. கல்வியானது மனிதனைச் சிறந்த ஒழுக்கம்

உள்ளவனாக மாற்றுகின்றது. மிருகக் குணங்களில் இருந்து வேறுபடுத்துகிறது.

**கல்வியின் முக்கியத்துவம் :**

"பிச்சை புகினும் கற்கை நன்றே" என்று ஔவையார் கூறுகின்றார். அதாவது எவ்வளவு கடினப்பட்டாலும் கல்வியைப் பெற்றுவிட வேண்டும் என்பதையே அவர் வலியுறுத்துகின்றார். உலகை மாற்றக்கூடிய சக்தி கல்விக்கு உண்டு. நல்லவை, தீயவை எனப் பிரித்தறிந்து வாழ்வில் நலம் பெறக் கல்வி முக்கியமானதாகும்.

**கல்வியின் பயன்கள் :**

கல்வியினால் நமக்கு ஏற்படும் இடர்களையெல்லாம் வெல்ல முடியும். மனப் பயத்தைப் போக்குகின்ற சக்தி கல்விக்கு உண்டு. வறுமையில் கை கொடுப்பதும், நாம் கற்ற கல்விதான். கல்விப்பேறு என்பது வாழ்க்கையில் மிகவும் முக்கியமான பேறாகும். நிலையாகத் தொடரக் கூடிய செல்வமாகும்.

**கல்வியில் உயர்ந்தவர்கள் :**

கல்வியினால் பல்வேறுபட்ட நபர்கள் உயர்வு அடைந்துள்ளனர். அப்துல்கலாம், அம்பேத்கர், சுந்தர்பிச்சை, கல்பனா சாவ்லா போன்ற பலர் கல்வியால் உயர்வு அடைந்தவர்களாவர். சிறுவயதிலிருந்தே கல்வி மேல் கொண்ட ஆர்வமே இவர்களை உலகமே கொண்டாடும் மனிதர்கள் ஆக்கியுள்ளது.

**முடிவுரை :**

கல்வியினைப் பெறுவது அனைவரது உரிமையாகும், உரிமைகளை விட்டுக் கொடுக்காமல் கல்வியினை ஆர்வத்துடன் சிறுவயதிலிருந்தே கற்க வேண்டும்.

அ. பிரியங்கா
முதுநிலை முதலாண்டு தமிழிலக்கியம்

# இயற்கை

## குறிப்புச்சட்டகம்

முன்னுரை

இயற்கை வளங்களின் முக்கியத்துவம்

இயற்கை மாசு

இயற்கை வளங்களின் பாதுகாப்பு

சீற்றங்கள்

முடிவுரை

### முன்னுரை

இந்த உலகம் பல அற்புதமான இயற்கை அழகைக் கொண்டுள்ளது. எத்தனை பேர் அதன் அழகைக் கண்டு ஆச்சரியமும், சந்தோஷமும் கொண்டு வாழ்ந்து கொண்டு இருக்கிறோம்? இயற்கை எவ்வளவு அழகானதோ, அதைப்போல் சிலரின் வாழ்க்கையும், மிக அழகானதாக இருக்கிறது. எதார்த்தத்தைப் புரிந்துகொண்டு வாழும் வரை இயற்கை பல வண்ணங்கள் நிறைந்தது என்பதை மனம் உணரும். ஒவ்வொரு வண்ணத்திற்கும் ஒரு அர்த்தம் உண்டு. அதேபோல் அனைவரின் வாழ்க்கைக்கும் ஒரு அர்த்தம் இருக்கிறது.

### இயற்கை வளங்களின் முக்கியத்துவம்

மனித நடவடிக்கைகள் ஒவ்வொன்றிலும் இயற்கை வளங்களின் பங்களிப்பு இருக்கின்றது. இயற்கை மூலதனமாக, உணவுக்காக, தங்குமிடத்திற்காக, மருத்துவத்திற்காக, வேலைவாய்ப்புக்காக, தேசிய வளர்ச்சிக்காக என இயற்கை வளங்கள் மனித வாழ்வியலோடு ஒருமித்துள்ளது.

அவ்வாறே அனைத்து உயிரினங்களினது வாழ்வும் இயற்கையைச் சார்ந்தே இருக்கிறது. பல நாடுகளில் அங்குள்ள இயற்கை வளங்களைப் பொறுத்தே அந்த நாட்டின் பொருளாதார நிலை நிர்ணயிக்கப்படுகிறது. ஆதலால் அவற்றைப் பாதுகாக்க வேண்டியது நம் ஒவ்வொருவரது தலையாய கடமையாகும்.

"இயற்கை இறைவனின் இணையில்லா ஓவியம்"

**இயற்கை மாசு**

மக்கள் பயன்படுத்தும் வாகனப்புகை, தொழிற்சாலையிலிருந்து வெளிப்படும் புகையால் காற்று மாசடைகிறது. தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் தொழிற்சாலைக் கழிவுகள், வீட்டுக்கழிவுகள் போன்றவற்றாலும் ஆழ்துளை கிணறுகள் அமைப்பதாலும் நீர் மாசுபடுவதோடு மட்டுமல்லாமல் நிலத்தடி நீரின் அளவும் குறைந்து கொண்டு போகிறது. காடுகளைப் பராமரிக்காமல் அழிப்பதால் கனிம வளங்கள் குறைகின்றன.

இரப்பர், பிளாஸ்டிக், பாலிதீன் போன்றவைகளை உபயோகப்படுத்துவதாலும் அல்லது நிலத்தில் போட்டு எரிப்பதாலும், புதைப்பதாலும் நிலத்தின் வளம் கேடு அடைகிறது.

பல நிலங்களை விவசாயத்திற்குப் பயன்படுத்தாமல் வீடு கட்டுவது, தொழிற்சாலை கட்டுவது போன்ற காரணங்களால் மண்ணின் வளம் பாதிப்படைகிறது.

**இயற்கை வளங்களின் பாதுகாப்பு**

மனிதன் இப்புவியில் உயிர் வாழ மனித சக்திக்கு அப்பாற்பட்ட பல அற்புதங்களை நிகழ்த்தித் தந்த இயற்கையின் கொடைகளைப் பாதுகாத்து நம் எதிர்காலச் சந்ததிக்குக் கையளிக்க வேண்டியது எமது கடமையாகும்.

நீர், மின்சாரம், பெட்ரோலியம் என்பனவற்றைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும். பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டினை முற்றிலுமாகத் தவிர்க்க வேண்டும்.

வருங்காலத் தலைமுறையைக் கருத்தில் கொண்டு பசுமையான மரஞ்செடிகொடிகள், உயிரினங்கள், நீர்வளம், நிலவளம், கனிமவளம் ஆகியவற்றை அழிக்காமல் பாதுகாக்க வேண்டும். இல்லையேல் கல்லும், மண்ணும் உள்ள பாலைவனம் மட்டுமே எஞ்சி நிற்கும்.

**சீற்றங்கள்**

இயற்கை இவ்வாறெல்லாம் மாசடைவதால் சுனாமி, சூறாவளி, வெள்ளப்பெருக்கு, நிலச்சரிவு, பனிப்பொழிவு மற்றும் காட்டுத் தீ போன்ற இயற்கைச் சீற்றங்கள் உருவாகுவதற்குக் காரணமாக இருக்கிறது.

இந்தச் சீற்றங்கள் மனிதனை மட்டும் பாதிக்காமல் பறவைகளையும், விலங்குகளையும் பாதிப்பிற்கு உள்ளாக்குகின்றன.

இயற்கையைப் பாதுகாப்பதற்காகப் பல்வேறு நாடுகளும், பல்வேறு சட்ட திட்டங்களை இயற்றியுள்ளன. 1980-ஆம் ஆண்டு பன்னாட்டுப் பாதுகாப்புச் சங்கம் நீரை வீணாக்கக் கூடாது, மரங்களை வெட்டக்கூடாது, பிளாஸ்டிக் மற்றும் பாலிதீன் கவர்களைக் குறைந்த அளவு உபயோகப்படுத்த வேண்டும் போன்ற சட்ட திட்டங்களை இயற்றிச் செயல்பட்டு வருகிறது.

ஜூலை மாதம் 28-ஆம் தேதி உலகப் பாதுகாப்பு தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

**முடிவுரை :**

அகில உலக அரசுகள் அனைத்திற்கும் தற்போது உள்ள முக்கியப் பிரச்சினை இயற்கையைக் காப்பதே ஆகும். புதிய இயற்கை இடர்பாடுகளைத் தடுக்க மரம் நடுவது, இயற்கை வளங்களைப் பாதிக்காத வகையில் மனித வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவது போன்ற முயற்சிகளை எடுக்கத் தொடங்கிவிட்டன.

இயற்கை மனிதனுக்கு எத்தனையோ நல்ல விஷயங்களைக் கொடுத்துள்ளது. பறவைகள் ஒலியுடன் கூடிய இனிய காலைப் பொழுது, தூய குடிநீர், நாம் சுவாசிக்க ஏதுவான இயற்கையான தென்றல் காற்று, நாம் பசியாற பழங்கள், தானிய வகைகள் எனப் பலவற்றைக் கொடுத்துள்ளது. இத்தகைய பேரன்பைக் காட்டும் இயற்கையைக் காப்பதே ஒவ்வொரு மனிதனின் தலையாய கடமையாகும்.

க. ஸோனா
இளநிலை இரண்டாமாண்டு
கணினி அறிவியல்



# சட்டமேதை அம்பேத்கர்



## குறிப்புச்சட்டகம்

முன்னுரை
பிறப்பு
சாதனைகள்
சட்ட மேதை
நாட்டு நலப்பணிகள்
முடிவுரை

**முன்னுரை :**

விடுதலை பெற்ற இந்தியாவின் முதல் சட்ட அமைச்சராகவும், இந்திய அரசியல் சாசனத்தின் தந்தையாகவும் விளங்கியவர் அம்பேத்கர். மன்னர் ஆட்சியை விட மக்கள் ஆட்சிதான் சிறந்தது என்று எடுத்துரைத்தவர் அண்ணல் அம்பேத்கர் அவர்கள். சட்டங்களை வரையறுத்தால்தான் நாடு முன்னேற்றப் பாதையினை நோக்கி நகரும் என்று தலைவர்கள் சிந்தித்தனர். ஆனால் அதை நிறைவேற்றிக் காட்டியவர் அம்பேத்கர் அவர்கள்.

**பிறப்பு :**

மத்திய பிரதேசத்தில் மாவ் என்னும் இடத்தில் ஏப்ரல் 14ஆம் தேதி 1891ஆம் ஆண்டு பிறந்தார். இவர் தந்தை ராம்ஜி மாலோஜி சக்பால், தாய் பீமாபாய். இவர் இயற்பெயர் பீமாராவ் ராம்ஜி. கற்பி, புரட்சி செய், ஒன்று சேர் எனும் மந்திரத்தை வார்த்தையாகச் சொல்லாமல் தனது வாழ்க்கையில் நிரூபித்துக் காட்டியவர்.

**சாதனைகள் :**

கல்வி கற்கக் கூடாது என்று சொல்லியவர்களுக்குப் பாடம் புகட்டும்படி படிப்பால் உலகத்தைத் திரும்பிப் பார்க்க வைத்தார். இங்கிலாந்தில் இவருக்குப் பாரிஸ்டர் பட்டம் வழங்கப்பட்டது. அமெரிக்கா சென்று கல்வி கற்ற முதல் இந்தியர் என்ற பெருமைக்குரியவர் இவர்.

**சட்டமேதை :**

ஒரு நாடு முன்னேற்றப் பாதையில் வளர வேண்டும் என்றால் அந்த நாட்டில் சட்டங்கள் ஒழுங்காக இருக்க வேண்டும் என்பதை உணர்ந்து சட்ட அமைச்சராகப் பொறுப்பேற்றார். கல்வி, சுதந்திரம், பெண்களுக்கான உரிமைகள் இவற்றை எல்லாம் இந்தச் சமூகத்தில் அனைவரும் பெற வேண்டும் என்று மிகச் சிறந்த ஒரு அரசியலமைப்புச் சட்டத்தை இயற்றினார்.

இவரின் சட்டங்கள் யாவும் ஒடுக்கப்பட்ட மக்களைக் காப்பாற்றும் வகையிலும், பெண்களுக்கு எதிரான கொடுமைகளை நீக்கும் வகையிலும் இருந்தன. மக்களிடம் இருக்கும் மூடநம்பிக்கையைக் களைய அரும்பாடுபட்டார்.

**நாட்டு நலப்பணிகள் :**

நாட்டில் இருக்கும் பிரிவினைகளையும், வேற்றுமைகளையும் களைய முயற்சி செய்தார். Reserve Bank of India உருவாகக் காரணமாக இருந்தவர். பெண்களுக்காகப் பல சட்டங்களை இயற்றி அவற்றை நடைமுறைப்படுத்தினார்.

**முடிவுரை :**

வாழும் காலத்தில் சொல்லிய வாக்குகள் அனைத்தையும் நடைமுறைப்படுத்தியவர். நாட்டிற்குப் பல பணிகளைச் செய்த அம்பேத்கர் 1956ஆம் ஆண்டு டிசம்பர் 6 அன்று இவ்வுலக வாழ்வை விட்டுச் சென்றார்.



சே. காயத்ரி
முதுநிலை இரண்டாமாண்டு
தமிழிலக்கியம்

# விடுகதைகள்

1. பாலாற்றின் நடுவே கருப்பு மீன் தெரியுது. அது என்ன ?
**கண்**

2. நாக்கு இல்லாவிட்டால் இவனுக்கு வேலையில்லை. அவன் யார் ?
**மணி**

3. மணி அடித்தால் மலைப்பாம்பு நகரும். அது என்ன ?
**இரயில்**

4. கண்ணில் தென்படுவான், கையில் பிடிபட மாட்டான், அவன் யார் ?
**புகை**

5. இரவும் பகலும் ஓய்வு இல்லை, படுத்தால் எழுப்ப ஆள் இல்லை. அவன் யார் ?
**இதயம்**


பு. சோபியா கலைச்செல்வி
முதுநிலை இரண்டாமாண்டு தமிழிலக்கியம்


1. என்னைக் கீழே போட்டால் நான் உடைந்து விடுவேன். என்னைப் பார்த்துச் சிரித்தால் நான் உங்களைப் பார்த்துச் சிரிப்பேன். நான் யார்?
**கண்ணாடி**

2. அறைகள் உண்டு, இது வீடு அல்ல. சித்திரமும் அல்ல. காவலுக்கு ஆயிரம் வீரர்கள் உண்டு, கோட்டையும் அல்ல. அது என்ன ?
**தேன் கூடு**

## விடுகதைகள்

3. பூ பூக்கும் காய் காய்க்கும். ஆனால் பழம் பழுக்காது. அது என்ன ?
**தேங்காய்**

4. நீ எங்கு சென்றாலும் தொடர்ந்து வருவான். அவன் யார் ?
**நிழல்**

5. வெள்ளை ஆடை உடுத்திய மஞ்சள் மகாராணி. அவள் யார் ?
**முட்டை**

6. சட்டையைக் கழற்றினால் சத்துணவு. அது என்ன ?
**வாழைப்பழம்**

7. தொடாமல் அழுவான், தொட்டால் பேசுவான். அவன் யார் ?
**தொலைபேசி**

8. தலையைச் சீவினால் தாளில் நடப்பான். அவன் யார் ?
**பென்சில்**

9. கையும் இல்லை, காலும் இல்லை, ஓடிக்கொண்டே இருப்பேன். நான் யார் ?
**நேரம்**

10. மலைகள் இருக்கு, ஆனால் கற்கள் இல்லை.. ஆறுகள் இருக்கு, ஆனால் தண்ணீர் இல்லை.. நகரம் இருக்கு, ஆனால் கட்டடம் இல்லை. நான் யார் ?
**மேப்**



பா. சுதர்ஷினி
இளநிலை முதலாண்டு
ஆங்கிலம்

## விடுகதைகள்

1. ஒரே வயிற்றில் பிறந்தாலும் ஒருவன் ஓடுவான்; மற்றவன் நடப்பான். அது என்ன ?
**கடிகார முள்கள்**

2. இவன் பெட்டியைத் திறந்தால் மீண்டும் பூட்ட முடியாது. அவன் யார் ?
**தேங்காய்**

3. பூவோடு பிறந்து, நாவோடு கலந்து விருந்தாவான் மருந்தாவான். அவன் யார்?
**தேன்**

4. நீண்ட உடம்புக்காரன், நெடுந்தூரப் பயணக்காரன், ஊரையே சுமந்து செல்வான். அவன் யார் ?
**இரயில்**

5. குண்டன் குழியில் விழுவான், குச்சியப்பன் தூக்கி விடுவான். அது என்ன ?
**பணியாரம்**

6. சிறு தூசி விழுந்ததும் குளமே கலங்கியது. அது என்ன?
**கண்**

7. வலை வீசி பிடிக்க முடியாத மீன்கள். அது என்ன ?
**விண்மீன்கள்**

8. தலைக்குள் கண் வைத்திருப்பவன் இவன் மட்டும்தான். அவன் யார் ?
**நுங்கு**

9. உயிர் இல்லாத நீதிபதியிடம் ஒழுங்கான நியாயம், அது என்ன ?
**தராசு**

## விடுகதைகள்

10. செய்தி வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே, அது என்ன ?
**தொலைபேசி**

11. வாயிலிருந்து நூல் போடுவான். மந்திரவாதியும் இல்லை, கிளைக்குக் கிளை தாவுவான் குரங்கும் இல்லை, வலை விரித்துப் பதுங்கியிருப்பான் வேடனும் இல்லை. அவன் யார் ?
**சிலந்தி**

12. எவர் கையிலும் சிக்காத கல் எங்கும் விற்காத கல். அது என்ன ?
**விக்கல்**

13. அடிக்காமல், திட்டாமல் கண்ணீரை வரவழைப்பான். அவன் யார்?
**வெங்காயம்**

14. தாய் குப்பையில், மகள் சந்தையிலே. அது என்ன ?
**நெல்**

15. இளமையில் பச்சை, முதுமையில் சிவப்பு, குணத்திலே எரிப்பு. அது என்ன?
**மிளகாய்**

16. வெயிலில் மலரும், காற்றில் உலரும். அது என்ன ?
**வியர்வை**

17. தலையில் கிரீடம் வைத்த தங்கப்பழம். அது என்ன ?
**அன்னாசிப்பழம்**



செ. கண்மணி
இளநிலை முதலாண்டு
வணிகவியல்

## விடுகதைகள்

1. நிலத்தில் முளைக்காத செடி நிமிர்ந்து நிற்காத செடி. அது என்ன ? **தலைமுடி**

2. உடம்பு முழுவதும் முள். அது என்ன? **சீப்பு**

3. மழையோடு வருகின்ற மஞ்சள் புறாவை வெட்டினால் ஒரு சொட்டு இரத்தம் கூட வராது. அது என்ன ? **ஈசல்**

4. அள்ள முடியும். ஆனால் கிள்ள முடியாது. அது என்ன ? **தண்ணீர்**

5. ஊர் முழுவதும் சுற்றுவேன், வீட்டிற்குள் நுழைய மாட்டேன். நான் யார்? **செருப்பு**

6. கூரை வீட்டைப் பிரித்தால் ஓட்டு வீடு. ஓட்டு வீட்டுக்குள்ளே வெள்ளை மாளிகை. வெள்ளை மாளிகையின் நடுவே ஒரு குளம். அது என்ன? **தேங்காய்**

7. கொதிக்கும் கிணற்றில் குதித்துக் குண்டாகிவிடுவான். அவன் யார் ? **பூரி**

8. உயிர் இல்லாதவனுக்கு உடம்பெல்லாம் நரம்பு. அது என்ன ? **பாய்**

9. வயதான பலருக்குப் புதிதாக ஒரு கை. அது என்ன ? **வழுக்கை**

10. எத்தனை தடவை சுற்றினாலும் தலைசுற்றாது. அது என்ன ? **மின் விசிறி**

11. முதுகிலே சுமை தூக்கி முணுமுணுக்காமல் அசைந்து வரும் அது என்ன ? **நத்தை**

ஞா. பிரித்திகா
முதுநிலை முதலாண்டு தமிழிலக்கியம்

## தெரிந்து கொள்வோம்

# உலகின் எட்டாவது அதிசயம்

உலகின் அதிகமானோர் தரிசிக்கும் கோயில் தமிழ் மன்னன் கட்டிய கம்போடியாவிலுள்ள அங்கோர்வாட் கோயில்.

இரண்டாம் சூரிய வர்மன் என்ற தமிழ் மன்னன் கம்போடியாவைக் கைப்பற்றியபோது அங்குள்ள அங்கோர்வாட் என்ற இடத்தில் இக்கோயிலைக் கட்டியுள்ளார். இன்று வரை உலகில் கட்டப்பட்ட வழிபாட்டுத் தலங்களிலேயே இதுதான் மிகப்பெரியது.

திரும்பிய திசை எல்லாம் சிற்பங்கள். இந்தக் கோயிலின் நான்கு பக்கச் சுற்றுச்சுவர்களும் முறையே 3.6 கி.மீ நீளம் உடையவை. 40 ஆண்டுகளில் இது கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இன்றைக்கு இருக்கக்கூடிய தொழில் நுட்பத்தைப் பயன்படுத்திக் கட்டினால் கூட 300 ஆண்டுகள் ஆகும்.

**கோயிலின் சிறப்புகள் :**

500 ஏக்கரில் பரந்திருக்கும் இந்தக் கோயிலை ஒரு கலைப் பொக்கிஷம் என்று கூறலாம்.

இக்கோயிலின் ஒரு பக்கச் சுற்றுச் சுவரின் நீளம் மூன்றரை கிலோ மீட்டர். இந்தக் கோயிலுக்குள் நம் தமிழகத்து ஸ்ரீரங்கம் கோயிலைப் போன்று 20 கோயில்களை அடைக்கலாம்.

இக்கோயிலை மேலிருந்து பார்க்கும்போது மூன்று அடுக்குகளாகத் தோற்றமளிக்கிறது.

**முதல் அடுக்கில் :** இராமாயணம், மகாபாரதக் காட்சிகள் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டிருக்கின்றன.

**இரண்டாம் அடுக்கில் :** நான்கு திசைகளிலும் பெரிய சதுர வடிவத் தொட்டிகள் கட்டப்பட்டுள்ளன.

**மூன்றாம் அடுக்கில் :** விண்ணை நோக்கி உயர்ந்துள்ள ஐந்து கோபுரங்கள் காட்சி தருகின்றன.

**தெரிந்து கொள்வோம்**

**கொடியில் கோயில் :** இந்த நாட்டுக்கொடியில் அங்கோர்வாட் கோயில் ஓவியம் உள்ளது. அங்கோர்வாட் கோயிலை உலக மரபுச் சின்னமாக அறிவித்துள்ளனர்.

க. ஸோனா
இளநிலை இரண்டாமாண்டு கணினி அறிவியல்

## கோவில்களைப் பற்றிச் சில தகவல்கள்

❀ மதுரை மீனாட்சி அம்மன் கோவிலின் பொற்றாமரை குளத்தில் மீன்கள் வளராது.

❀ எல்லாத் திருத்தலங்களிலும் பெருமாள் இடது கையில் சங்கு காணப்படும். திருக்கோவிலூரில் மட்டும் வலது கையில் சங்கு காணப்படும்.

❀ சிதம்பரம் ஆலயத்தில் ஒரே இடத்தில் நின்றபடி கோவிந்தராஜப் பெருமாளையும், நடராஜரையும் தரிசிக்கலாம்.

❀ திருவண்ணாமலை சுவாமி எப்போதும் பக்கத்து வாசல் வழியாகத்தான் வெளியே வருவார் ( ராஜகோபுரம் வழியாக வரமாட்டார்).

❀ மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் மொத்தம் 14 கோபுரங்கள் உள்ளன. வேறு எங்கும் இவ்வளவு அதிகமான கோபுரங்கள் இல்லை.

❀ திருநாகேஸ்வரம் உப்பிலியப்பன் கோவில் நைவேத்தியப் பண்டங்களுக்கு உப்பு சேர்ப்பதில்லை.

❀ இராமேஸ்வரம் இராமநாதசுவாமி கோவில் நைவேத்தியப் பண்டங்களுக்கும் உப்பு சேர்ப்பதில்லை.

❀ இராமேஸ்வரம் இராமநாதசுவாமி கோவிலில் பெருமாள் கோவிலில் தீர்த்தம் தருவது போல் சிவன் கோவிலிலும் தீர்த்தம் தருவார்கள்.

செ. அபிநயா (எ) தமிழ்பாரதி
இளநிலை முதலாண்டு தமிழிலக்கியம்

சிறுகதை

# அழகின் ரகசியம்

சுஷ்மாவிற்குக் கண்ணாடி முன் நிற்பதுதான் பொழுதுபோக்காக இருந்தது. ஒருநாள் அவளின் அம்மா அதனைப் பார்த்து இவள் என்ன கண்ணாடி முன்னாடியே நிற்கிறாள் என்று முணுமுணுத்துக் கொண்டே சமையலறை நோக்கிச் சென்றாள்.

மறுநாள் பள்ளிக்குச் சென்றாள். பத்தாம் வகுப்பு வரை வேறு பள்ளியில் படித்தாள். ஆனால் இப்போது இருபாலினரும் படிக்கும் பள்ளியில் சேர்ந்தாள். முதல் நாள் வகுப்பிற்குச் செல்லும்போது, அவளைப் பார்த்து இவ்ளோ, அழகா இருக்காளே என்று தங்களுக்குள் பேசிக்கொண்டனர். அது அவள் காதில் விழுந்தாலும் கண்டுகொள்ள மாட்டாள்.

அவளைச் சுற்றி ஒரே கூட்டமாகவே இருக்கும். கேலியோ, கிண்டலோ பேசிக்கொண்டே இருப்பார்கள்.

"பச்சை டிரஸ் சூப்பர்பா"என்று ஒருவன், "பச்சைக்கிளி முத்துச்சரம்" என்று இன்னொருவன் .

அவள் அம்மா ஒருநாள் கண்ணாடி முன் நிற்பதைக் கண்டு, 'ஆமா என்னதா முகத்தில் இருக்குதுனு தெரியல', என்று அவளைப் பார்த்துத் திட்டினாள்.

'ஆமாம் போங்க, அம்மா. எங்க வகுப்பிலே சுவேதா என்ற பெண்தான் நல்ல படிப்பாள். ஆனால் எல்லாரும் என்னுடன்தான் இருப்பாங்க. அதுக்கு எல்லாம் காரணம் என்னுடைய அழகுதான்' , என்பாள்.

பள்ளியை முடித்துக் கல்லூரிக்குச் செல்லும்போது, அவள் வகுப்பறைக்குள் முப்பத்திரண்டு ஆண்களும், மூன்று பெண் பிள்ளைகளும்தான் இருந்தார்கள்.

மறுநாள் வகுப்பிற்குச் சென்ற பேராசிரியர் நம் வகுப்பிற்குப்

புதியதாக ஒரு பெண் வருவதாகக் கூறினார். அந்தப் பெண்ணும் அந்த சமயம் வந்து சேர்ந்தாள். பார்ப்பதற்கே, வெள்ளையாக, சேலை உடுத்திக்கொண்டு, தங்கம் போல மினுமினுப்புடன் காணப்பட்டாள்.

பக்கத்து வகுப்பில் இருந்து ‘என்னடா உங்க வகுப்பிற்கு புதுசா ஒரு பொண்ணு வந்து இருக்காமே ! யாருடா அது’ என்று சன்னல் ஓரங்களிலிருந்து பேசுவதனைக் கேட்டுக்கொண்டு இருந்தாள்.

இணக்கமுடன் இருந்த சுஷ்மா இப்போது இறுக்கமான நிலையில் இருப்பதனை உணர்ந்து கொண்டாள்.

கல்லூரி முடிந்து வீட்டிற்குத் திரும்பும்போது அவள் தோழி பேசிக்கொண்டே இருந்தாள், இவள் வெறும் தலையை மட்டுமே ஆட்டிக்கொண்டு இருந்தாள். தன் மனதிற்குள் எண்ணிக்கொண்டே சென்றாள், அழகு மட்டுமே வாழ்க்கைக்குத் தேவையில்லை, கல்வியறிவும் தேவை என்று உணர்ந்த சுஷ்மா.

அவள் தனது அறையில், புத்தகமும் நோட்டும் கையில் வைத்து இருப்பதனை அம்மா பார்த்துக் கொண்டு இருந்தாள்.

தன் பிள்ளை, படிக்க ஆரம்பித்துவிட்டாள் என்பதனைக் கண்டு தாய் ஆனவள் அகம் மகிழ்ந்து கொண்டு இருக்கிறாள்.

**“அழகு என்பது புறத்தில்**
**மட்டுமல்ல ..!!**
**அதனையும் தாண்டிய**
**அழகும் இருப்பதனை**
**நாம் அறிய வேண்டும்”**

சி. சௌமியா
முதுநிலை முதலாண்டு தமிழிலக்கியம்

# ஓவியங்கள்

## கிளி



பச்சை நிறச் சிறகில்
பவளச் செவ்வாயில்
குழலைப் போல – தினம்
மழலை கொஞ்சும்
மகிழும் பூவோ – நீ ...

**சு. தன்ஷிகா**
இளநிலை முதலாண்டு தகவல் தொழில்நுட்பவியல்


## அம்மா

**இந்த உலகில் நான்
வருவதற்கு முன்னே
என்னை நேசித்தவள்
நீ மட்டுமே!!!**




**தெ. இலக்கியா**
இளநிலை முதலாண்டு
தகவல் தொழில்நுட்பவியல்

## ஓவியங்கள்



**வி. சுவாதி**
இளநிலை முதலாண்டு
தகவல் தொழில்நுட்பவியல்



*Naa apdiya*
*Shock aayitten*

**ச. இனியா**
முதுநிலை இரண்டாமாண்டு
தமிழிலக்கியம்





**தி. தாரணி**
முதுநிலை முதலாண்டு
தமிழிலக்கியம்

## ஓவியங்கள்



**சு. தாமரைச்செல்வி**
இளநிலை இரண்டாமாண்டு
தகவல் தொழில்நுட்பவியல்






**ச. ஜெயபாரதி**
இளநிலை முதலாண்டு
ஊட்டச்சத்து மற்றும் உணவுமுறை மேலாண்மையியல்

## மயில்



மயில் இறகில் இருந்து வந்த
மாறுவேட மயிலே
நீ என்ன
பிரம்மனின் படைப்பா
இல்லை
பிரம்மாண்ட படைப்பா?

**ப. அபசிகா**
இளநிலை முதலாண்டு தகவல் தொழில்நுட்பவியல்



**த. ஜெயஸ்ரீ**
இளநிலை முதலாண்டு
தகவல் தொழில்நுட்பவியல்



**தி. தாரணி**
முதுநிலை முதலாண்டு
தமிழிலக்கியம்


## ஓவியங்கள்



கூட்டத்தில்
ஒருவன்



**மீ. லோஷினி**
இளநிலை முதலாண்டு
ஊட்டச்சத்து மற்றும் உணவுமுறை மேலாண்மையியல்



**க. மகாலெட்சுமி**
இளநிலை முதலாண்டு
ஊட்டச்சத்து மற்றும்
உணவுமுறை மேலாண்மையியல்

## ஓவியங்கள்



**வே. திரிஷ்ணா**
இளநிலை இரண்டாமாண்டு
தமிழிலக்கியம்



**ம. காவியா**
இளநிலை முதலாண்டு
தகவல் தொழில்நுட்பவியல்

# பொன்மொழி

செயல் ஒன்றிச் சிந்தித்து
செயலாற்றுவதே நன்று
உனது மனதை உயர்த்த
லட்சியங்களாலும்
சிந்தனைகளாலும் நிரப்பு
அவற்றை ஒவ்வொரு நாளின்
பகலிலும் இரவிலும்
உன் முன் நிறுத்து
அதிலிருந்து நல்ல செயல்கள்
விளையும்.

- சுவாமி விவேகானந்தர்



## சாகித்ய அகாதமி விருது பெற்ற **தேவி பாரதி - 2023**

| | | |
|---|---|---|
| பெயர் | : | ந. ராஜேந்திரன் |
| பெற்றோர் | : | நல்லமுத்து, முத்தம்மாள் |
| பிறப்பு | : | 1957 |
| ஊர் | : | ஈரோடு மாவட்டம் சென்னிமலை |
| பணி | : | ஆசிரியப்பணி (2006 வரை) |
| எழுதிய படைப்புகள் | : | நட்ராஜ் மகராஜ் |
| | | நொய்யல் |
| | | நிழலின் தன்மை |
| | | பலி |
| பெற்ற விருதுகள் | : | தன்னறம் இலக்கிய விருது |
| | | ஜெயகாந்தன் விருது |
| | | அறிஞர் போற்றுதும் விருது |
| சாகித்ய அகாதமி விருது பெற்ற நூல் | : | நீர்வழிப்படூஉம் |

கிருஷ்ணா பிரிண்டர்ஸ்